1982 மார்ச் 6]

அரசு பேருந்துகளில் பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை.

* வினா எண். 398.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசு பேருந்துகளில் டிக்கெட் இல்லாமல் பயணம் செய்பவர்களுக்கு ரூபாய் இரண்டு என்று இருக்கும் அபராதத் தொகையை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் உயர்த்தப்படுகிறது என்பதை அறிய விரும்புவதுடன், அரசாங்கப் பேருந்துகளில் செக்கிங் அதிக அளவுக்கு இல்லாத காரணத்தினால் கண்டக்டர்கள் வாடிக்கையாளர்களை பழக்கப்படுத்தி வைத்துக்கொண்டு மாமூல் வாங்கிக்கொண்டு டிக்கட் கொடுக்காமல் பயணம் செய்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, செக்கிங்கை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மத்திய அரசாங்கம் உயர்த்துவதற்கான ஒரு சட்டத்தைப் போட்டிருக்கிறது. அதிலே கட்டணத் தொகையிலிருந்து 10 மடங்கு அல்லது 500 ரூபாய் இதிலே எது குறைவோ அந்தத் தொகையை விதிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் ஏதாவது மாற்றம் செய்யலாமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வைக்கவேண்டுமென்று நார்ம்ஸ் சட்டத்திலே இருக்கிறதோ அந்த அளவுக்கு நாம் வைத்துக்கொண்டிருக்கிறோம் அது மட்டுமல்ல, இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்காக நேரிடையாக நிர்வாக இயக்குனர்கள் தங்கள் அமைப்பின் கீழே செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் வைத்துக் கொண்டு செய்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தின் அடிப்படையிலே அதைப் பரிசீலிப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் கூட்டமான நேரங்களில் கண்டக்டர்கள் டிக்கட் என்று சொல்லிவிட்டு 5, 10 ரூபாய் அதிகமாகக் கொடுத்தால் டிக்கட் கொடுக்கிறார்கள். எம்.எல்.ஏ., எம்.பி. இவர்கள் வரவில்லையென்றால்—பாஸ் வரவில்லையென்றால்—கண்டக்டர்கள் அந்த நெம்பரை நோட் பண்ணிவைத்துக்கொண்டு டிக்கட் விற்றுவிடுகிறார்கள். கணக்குகள் எழுதுவது இல்லை. இப்படிப்பட்ட தவறுகள் செய்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தவறுகள் இருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியில் சொன்னதுபோல் தவறுகள் நடக்குமானால் அந்தக் குறிப்புகளை உடனடியாக எனக்கு சொல்வது உறுப்பினர்களது கடமையாகும், அதுதான் நாட்டுக்கும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : டிக்கட் இல்லாமல் பயணம் செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு எத்தனை பேர்கள் அப்படி பயணம் செய்தார்கள். அப்படி பயணம் செய்தவர்களைப் பிடித்து எவ்வளவு ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது, அதன் மூலமாக போக்குவரத்துக் கழகத்திற்கு கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அபராதத் தொகை மாற்றியமைப்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு வசூலித்திருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. வேண்டுமானால் எல்லா போக்குவரத்துக் கழகங்களிடமிருந்து கேட்க வேண்டும். கேட்டுத் தர தயாராக இருக்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேள்வி கேட்கிறபோது பேருந்துகளில் கண்டக்டர்கள் மாமூல் வாங்கிக் கொண்டு டிக்கட் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி மாமூல் வாங்கிக்கொண்டு டிக்கட் இல்லாமல் பயணம் செய்ய அனுமதித்தது பற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா ? அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இது சாதாரணமாக ஆங்காங்கே நடக்கக்கூடிய காரியமாக இருக்கிறது. எங்காவது ஒன்றிரண்டு நடக்கிறபோது அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லை, அதற்காகத்தான் தனித்தனியாக மாவட்டத்திற்கு ஒன்று என்ற முறையிலே கூட போக்குவரத்துக் கழகங்களை அமைத்து நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அவர்கள் நேரடியாக அவற்றைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*வினா எண். 399. மாண்புமிகு அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.